நாள்: 04.07.2014

**இன்றைய வேளாண் செய்திகள்**

## பச்சை பட்டாணியில் ரசாயன சாயம் கலப்பு



**ஊட்டி**:கடைகளில் விற்கப்படும், பச்சை பட்டாணியில், நச்சுத்தன்மை நிறைந்த ரசாயனம் கலந்து விற்கப்படுவது, அதிகாரிகளின் சோதனையில் தெரிய வந்துள்ளது.நீலகிரி மாவட்ட உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாக துறை அலுவலர்கள், நேற்று, ஊட்டி சுற்றுவட்டார பகுதிகளில் உள்ள கடைகளில், சோதனை நடத்தினர். இதில், பல கடைகளில், காலாவதியான தின்பண்ட பாக்கெட்கள், குளிர் பானங்கள்; கலப்பட தேயிலை தூள்; தடை செய்யப்பட்ட குட்கா, பான்பராக் போன்ற போதை பொருட்கள் என, 40 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. பல கடைகளில், பாக்கெட்டுகளில் அடைக்கப்பட்ட, பச்சை நிற பட்டாணியில், செயற்கை சாயம் கலந்து விற்பனை செய்வதும் தெரிய வந்தது.

உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாக துறை, நீலகிரி மாவட்ட அலுவலர், டாக்டர் ரவி கூறியதாவது:இயற்கையாக விளையக் கூடிய, பச்சை பட்டாணியை, பலரும் விரும்பி உண்கின்றனர். அவை, பாக்கெட்டுகளில் அடைக்கப்பட்டு, கடைகளில் விற்பனை செய்யப்படுகின்றன. மக்களுக்கு ஆசையை துாண்டும் நோக்கில், பச்சை நிறம் ரசாயன சாயத்தை அதிகளவில், இந்த பட்டாணியில் சேர்க்கின்றனர். அதில், 'பிரில்லியன்ட் புளு', 'டாடாரேசைன்' என்ற ரசாயனங்கள் உள்ளன. அவற்றை உண்ணும் மக்களுக்கு, கேன்சர், வாய் புண் உட்பட பல்வேறு வியாதிகள் வர வாய்ப்புள்ளது. பொதுமக்கள், எச்சரிக்கையாக இருக்க வேண்டும். பளபளக்கும் பச்சை பட்டாணிகளை வாங்க கூடாது. உற்பத்தியாளர்கள், வியாபாரிகள் இத்தகைய செயலை தவிர்க்க வேண்டும்.இவ்வாறு, அவர் கூறினார்.

## பருவமழை தீவிரம்

**புதுடில்லி**:தமிழகத்தில் இன்னமும் கண்ணாமூச்சி காட்டி வரும் பருவமழை, வடமாநிலங்களில் பெய்யத் துவங்கியுள்ளது.கடந்த மாதம் 29ல், பருவமழை பெய்யும் என, வானிலை ஆய்வு மையம் தெரிவித்திருந்த நிலையில், நேற்று தான், மழை பெய்யத் துவங்கியது.

டில்லியில் நேற்று பெய்த பலத்த மழையால், வெப்பம் தணிந்தது. ராஜஸ்தான், உத்தர பிரதேசம், பஞ்சாப், அரியானா போன்ற மாநிலங்களிலும் பருவமழை பெய்தது. அது போல், நாட்டின் மகாராஷ்டிரா மாநிலத்தின் பல பகுதிகளிலும், தொடர்ந்து பலத்த மழை பெய்து வருகிறது.

## வேளாண் கல்லூரி மாணவியர் விளக்கம்; வெள்ளை பூச்சிகளை அழிக்கும் "மஞ்சள் ஒட்டுண்ணி'

**சத்தியமங்கலம்**: சத்தியமங்கலம் பகுதியில், விவசாய பயிரை பாதிக்கும் வெள்ளை பூச்சிகளை அழிக்கும், புதிய மஞ்சள் நிற ஒட்டுண்ணி குறித்து விவசாயிகளுக்கு கோவை வேளாண்மை கல்லூரி மாணவிகள் விளக்கம்

அளித்தனர்.

கோவை வேளாண்மை பல்கலைக்கழக கிராமப்புற தங்கல் திட்டத்தின் கீழ், சத்தியமங்கலம் அருகே அரியப்பம்பாளையத்தில் தங்கி, சத்தியமங்கலம் சுற்றுப்பகுதியை சேர்ந்த விவசாயிகளுக்கு பல்வேறு விளக்க பயிற்சி அளித்து வருகின்றனர்.இதில் முக்கிய பங்காக விவசாய பயிர்களை அதிகம் தாக்கும் வெள்ளை பூச்சிகளை அழிக்க, புதிதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ள மஞ்சள் நிற ஒட்டுண்ணிகளை, எவ்வாறு பயன்படுத்துவது என்பது குறித்து, தாண்டாம்பாளையத்தில் விளக்க பயிற்சி அளித்தனர். குறிப்பாக, மல்லிகை பூ செடியை, அதிகமாக வெள்ளை பூச்சி தாக்குகிறது. இதனால், பத்து சதவீதம் மகசூல் பாதிக்கிறது. இதனால், மாதம், 3,000 ரூபாய் வரை விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. ஆகவே, மல்லிகை பூ செடியை தாக்கும், வெள்ளை பூச்சிகளை கட்டுப்படுத்தும், மஞ்சள் நிற ஒட்டுண்ணிகளை பயன்படுத்தும் விதத்தை, தாண்டாம்பாளையம் சிவா என்ற விவசாயி தோட்டத்தில், பல்கழைகழக மாணவிகள் விளக்க பயிற்சி அளித்தனர்.வெள்ளை பூச்சிகள் மஞ்சள் நிறத்தால் ஈர்க்கப்படுகிறது. இந்த மஞ்சள் பொறியில் பசை தடவியுள்ளதால், வெள்ளை பூச்சி, இந்த பொறியில் சிக்கி, மீண்டும் பறக்க முடியாமல் இறந்து விடுகின்றன. இதன் மூலம், வெள்ளைப்பூச்சி கட்டுப்படுத்தி அழிக்கப்படுகிறது. ஏக்கர் ஒன்றுக்கு, ஐந்து முதல், ஆறு பொறிகளை போதிய இடைவெளி விட்டு செடியின் உயரத்துக்கு தகுந்தாற்போல் வைத்தால், வெள்ளை பூச்சிகளை எளிதில் அழித்துவிடலாம், என, இம்மாணவிகள் கூறினர்.இந்த விளக்க பயிற்சியில், கோவை வேளாண்மை பல்கலை கழக அதிகாரிகள் மற்றும் சத்தியமங்கலம் வட்டார தோட்டக்கலை உதவி இயக்குனர் பழனிசாமி, உதவி அலுவலர் வேலுச்சாமி உட்பட பலர் பங்கேற்றனர்.

## கொப்பரை தேங்காய் ரூ.20 லட்சத்துக்கு ஏலம்

**கோபிசெட்டிபாளையம்**: கோபி, ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில், நேற்று நடந்த ஏலத்தில், 378 தேங்காய் பருப்பு மூட்டைகள், 20 லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது. வாரந்தோறும் வியாழனன்று, கோபி ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில், கொப்பரை தேங்காய் ஏலம் நடக்கிறது. அதன்படி, ஈரோடு மாவட்டம் மற்றும் அதன் சுற்று வட்டாரப்பகுதியில் இருந்து, ஏராளமான விவசாயிகள், கொப்பரை தேங்காய், நேற்று ஏலத்துக்கு கொண்டு வந்திருந்தனர்.ஒரு கிலோ கொப்பரை தேங்காய் பருப்பு, 98.91 முதல், 100.39 ரூபாய்க்கு விலை போனது. மொத்தம், 378 மூட்டைகள், 20 லட்சம் ரூபாய்க்கு, ஏலம் போனது. திருப்பூர், கோவை, ஈரோடு உள்ளிட்ட பல்வேறு மாவட்டங் களை சேர்ந்த, வியாபாரிகள், கொப்பரை ஏலம் எடுத்தனர்.

## மீன் விலை கிடுகிடு

**தேவிபட்டினம்**:ரம்ஜான் நோன்பு காலத்தை முன்னிட்டு கடல் மீன்களின் தேவை அதிகரித்து தேவிபட்டினம், ஆர்.எஸ்.மங்கலம், தொண்டி ஆகிய பகுதிகளில் மீன் விலை கிடுகிடுவென உயர்ந்துள்ளது. கடந்த வாரம் தேவிபட்டினம் மார்க்கெட்டில் கிலோ ரூ.500க்கு விற்ற சீலா நேற்று 575க்கும், 300க்கு விற்பனையான முரல் 350, 220க்கு விற்ற நகரை 300, 200க்கு விற்ற வில மீன் 230, 150க்கு விற்ற சுறா 200, 180க்கு விற்ற ஊழி 230க்கும் விற்பனையானது.

## மழை பாதிப்பால் தென்னை சாகுபடி பாதிப்பு:ஓராண்டில் மாயமானது 250 எக்டேர்

**ராமநாதபுரம்**:பருவமழை பொய்ப்பு, பூச்சி தாக்குதலால் ராமநாதபுரம் மாவட்டத்தில் தென்னை சாகுபடி பரப்பளவு, நாளுக்கு நாள் குறைந்து வருகிறது. கடந்த ஓராண்டில் 250 எக்டேர் வரை அழிந்துவிட்டதால், விவசாயிகள் பிழைப்பு தேடி

வெளி மாவட்டங்களுக்கு செல்லும் பரிதாப நிலை ஏற்பட்டுள்ளது. ராமநாதபுரம் மாவட்டத்தில் நெல்லுக்கு அடுத்தபடியாக, தென்னை விவசாயத்தில் ஆயிரக்கணக்கான விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். ராமநாதபுரம், உச்சிப்புளி, பெருங்குளம், வாலாந்தரவை, முத்துப்பட்டிணம், திருப்புல்லாணி, கீழக்கரை உள்ளிட்ட பெரும்பாலான பகுதிகளில், ஆயிரக்கணக்கான ஏக்கரில் தென்னை விவசாயம் நடக்கிறது. "ஆயிரம் தென்னை வைத்தவன் அரசனுக்கு ஈடாவான்' என்ற பழமொழிக்கு ஏற்ப இப்பகுதி விவசாயிகள் தென்னை விவசாயத்தில் பெருமிதம் அடைந்து வந்தனர்.

இங்கு விளையும் தேங்காய்கள் அளவில் பெரியதாகவும், பருப்பு ருசியானதாகவும் இருந்ததால் வெளிமார்க்கெட்டில் இதற்கு நல்ல வரவேற்பு கிடைத்தது. திருப்பூர், காங்கேயம், புதுக்கோட்டை போன்ற வெளியூர் மொத்த வியாபாரிகள் இங்கு முகாமிட்டு "டன்' கணக்கில் தேங்காய்களை கொப்பரைக்கு வாங்கிச் செல்வர். மாதந்தோறும் பராமரிப்பு செலவு போக, 20 ஆயிரம் ரூபாய் வரை விவசாயிகளுக்கு லாபம் கிடைத்து வந்தது. தண்ணீர் இன்றி கண்ணீர்: மாவட்டத்தில் கடந்த 2 ஆண்டுகளாக பருவமழை பொய்ப்பால், தென்னை விவசாயம் பெரிதும் பாதிக்கப்பட்டது. தண்ணீர் இல்லாததால் விளைச்சல் பாதியாக குறைந்தது.

காலப்போக்கில், பராமரிக்க முடியாமல் விவசாயிகள் பலர், தென்னந்தோப்புகளை குத்தகைக்கு விடுவதும், மரங்களை வெட்டி அழித்து, அந்த இடத்தை "பிளாட்'டுகளாக மாற்றுவதும் நீடிக்கிறது. இதனால், நாளுக்கு நாள் தென்னை சாகுபடி பரப்பளவு கணிசமாக குறைந்து வருகிறது.

இதற்கிடையில், பூச்சி தாக்குதலாலும் விளைச்சல் பாதிக்கப்பட்டு வருகிறது. இப்படி பல்வேறு காரணங்களால், நாளுக்கு நாள் தென்னை விவசாயம் குறைந்து கடந்த ஓராண்டில் 250 ஏக்கர் பரப்பளவு வரை சாகுபடி பரப்பளவு குறைந்துள்ளது. இதனால், தென்னை விவசாயிகள் பிழைப்பு தேடி வெளிமாவட்டங்களுக்கு செல்லும் பரிதாப நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்), கனகராசன் கூறியதாவது: கடந்தாண்டு, மாவட்டத்தில் 9,206 எக்டேர் பரப்பளவில் தென்னை சாகுபடி

நடந்தது. நடப்பாண்டு 8,954 எக்டேராக சுருங்கிவிட்டது. ஓராண்டிற்குள் 250 எக்டேர் அழிந்துவிட்டது.

வேளாண் அதிகாரிகள் ஆய்வில், 50 சதவீதம் பூச்சி தாக்குதலால் தென்னை அழிந்து வருவதாக கண்டறியப்பட்டது. இதையடுத்து, தென்னையை அதிகம் தாக்கும் காண்டாமிருகம் வண்டு(சிவப்பு கூண் வண்டு), கருந்தலை புழு தாக்குதலை கட்டுப்படுத்த, தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. திருப்புல்லாணி பகுதியில் விவசாயிகளுக்கு பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்த பயிற்சி அளித்துள்ளோம். இம்முறையில் பூச்சி தாக்குதல் குறைந்துள்ளது, என்றார்.

## கமுதியில் கருவேல மரங்கள் அழிப்பு:குறுகியகால பயிர் சாகுபடிக்கு தயார்

**கமுதி**:கமுதியில் கருவேல மரங்களை அழித்து, சில விவசாயிகள் குறுகிய கால பயிர்களை விவசாயம் செய்ய தயாராகியுள்ளனர்.கமுதியில் 13 ஆயிரம் எக்டேரில் கருவேல மரங்கள் வளர்ந்துள்ளன. சமீபத்தில் தோப்படைப்பட்டி பகுதியில் 50 ஏக்கரில் கருவேலமரங்களை அழித்து பருத்தி பயிரிடப்பட்டன.அதே போல் கமுதி நகரை ஒட்டியுள்ள சிங்கப்புளியாப்பட்டி உட்பட சில பகுதிகளில், 100 ஏக்கர் நிலங்களில் ஆக்கிரமித்திருந்த கருவேல மரங்கள் அழிக்கப்பட்டு வருகின்றன.

இப்பகுதி விவசாயிகள் கூறியதாவது: எங்கள் பகுதியில் கருவேலமரங்களின் ஆக்கிரமிப்பால் நிலத்தடிநீர் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதோடு, வெயிலின் தாக்கமும் அதிகரித்துள்ளது. குறிப்பிட்ட பகுதியில் கருவேல மரங்களை அழித்து குறுகிய கால பயிர்களான சோளம், கம்பு, பருத்தி உட்பட சில பயிர்களை சாகுபடி செய்ய முன்வந்துள்ளோம். இதில் போதுமான லாபம் கிடைப்பதுடன் நிலத்தடிநீர் எதிர்கால சந்ததியினருக்கு பாதிக்காத வண்ணம் பார்த்துக்கொள்ளலாம். அரசு சார்பில் பல கிராமங்களில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் பட்சத்தில், நிலத்தடி நீரை காப்பதுடன், விவசாயிகளின் எதிர்காலமும் நன்றாக இருக்கும், என்றனர்.

## மழையால் பசுமை அடைந்த நெற்பயிர்கள்

**பொன்னேரி** ;நெல் பயிரிடப்பட்டிருந்த விளை நிலங்களில், அடுத்தடுத்து, மூன்று தினங்கள், மழை பெய்ததால், நெற்பயிர்கள் பசுமை அடைந்து உள்ளன.

மீஞ்சூர் ஒன்றியத்தில், 18 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில், சம்பா சாகுபடிக்காக நெல் பயிரிடப்பட்டு உள்ளது. களைப்பணிகள் முடிந்து, விளை நிலங்கள் இயற்கை உரமான மழைக்காக காத்து கிடந்தன.இந்நிலையில், 10 நாள்களுக்கு முன் வரை, கோடை வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்தது.பயிரிடப்பட்ட நெல் நாற்றுக்கள், வெயிலில் காய்ந்து கருகும் நிலையில் ஏற்பட்டது. ஆழ்துளை மோட்டார்கள் மூலம் தொடர்ந்து நீர் பாய்ச்சினாலும், நிலத்திற்கு போதுமானதாக இல்லை. விளை நிலங்களுக்கு இயற்கை நீரூற்றான மழை பெய்தால், பயிர்கள் நன்கு இருக்கும் என, விவசாயிகள் மழைக்காக காத்திருந்தனர்.இந்நிலையில், கடந்த ஒரு வாரமாக, பொன்னேரி மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில், காற்றுடன்கூடிய மழை பெய்து வருகிறது. இதனால் மழைக்காக காத்திருந்த நெற்பயிர்கள், புத்துயிர் பெற்று உள்ளன.தற்போது, சின்னகாவணம், தேவராஞ்சேரி, மெதூர் உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில் நெற்பயிர்கள் பச்சை பசேலென மாறி உள்ளது. அடுத்த சில தினங்களுக்கு மழை தொடர்ந்தால், நெற்பயிர்கள் நன்கு வளர்வதுடன், விளைச்சலும் அதிகரிக்கும் என, விவசாயிகள் கூறுகின்றனர்.

## கள்ளக்குறிச்சி மார்க்கெட் கமிட்டிக்கு எள், மக்காசோளம் வரத்து குறைவு

**கள்ளக்குறிச்சி** : கள்ளக்குறிச்சி மார்க்கெட் கமிட்டிக்கு நேற்று எள், மக்காசோளம் வரத்து குறைவாக இருந்தது.

கள்ளக்குறிச்சி மார்க்கெட் கமிட்டிக்கு நேற்று பல பகுதியைச் சேர்ந்த 182 விவசாயிகள் 250 எள் மூட்டைகளை விற்பனைக்கு கொண்டு வந்தனர். அதிகபட்சம் ரூ.6,683க்கும், குறைந்த பட்சம் ரூ.5,789க்கும் விலை போனது. இதேபோல் 14 விவசாயிகள் 50 மூட்டை மக்காசோளம் விற்பனைக்கு கொண்டு வந்தனர். அதிகபட்சம் ரூ.1,339க்கும், குறைந்தபட்சம் ரூ.1,296க்கும் விலை

போனது. இதேபோல் 4 விவசாயிகள் 10 மூட்டை மணிலா விற்பனைக்கு கொண்டு வந்தனர். அதிகபட்சம் ரூ.4,249க்கும், குறைந்தபட்சம் ரூ.4,162க்கும் விற்றது. சராசரியாக எள் மூட்டைகள் வரத்து குறைவாகவே உள்ளதால் விலை சற்று உயர்ந்து காணப்பட்டது.விரைவில் சீசன் முடிவடைவதால் எள்வரத்து குறைந்துள்ளது. மீண்டும் இவ்வாண்டு நவம்பர் மாதம் முதல் எள் வணிகம் தொடங்கும் என மார்க்கெட்டிங் கமிட்டி மேலாளர் முருகன் தெரிவித்தார்.

**கிணறு ஆழப்படுத்தும் பணிகளில் விவசாயிகள்**

**ரிஷிவந்தியம்** : ரிஷிவந்தியம் பகுதி கிராமங்களில் உள்ள விவசாயிகள் தங்கள் விளைநிலங்களில் உள்ள கிணறுகளை ஆழப்படுத்துவதில் தீவிர ஆர்வம் காட்டி வருகின்றனர்.

ரிஷிவந்தியம் பகுதி விவசாய நிலங்களை அதிகமாக உள்ளடக்கியுள்ளது. மொத்தம் 24,343 ஹெக்டேர் பரப்பளவு விவசாய நிலங்கள் உள்ளன. கடந்த 2 ஆண்டுகளாக பருவ மழை இல்லாமல் விவசாயிகள் மன உளைச்சலுக்கு ஆளாகின்றனர். இப்பகுதியில் பயிரிடப்பட்ட கரும்பு, நெல் பயிர்கள் காய்ந்தன. இதனால் விவசாயிகள் சொட்டுநீர் பாசன முறையை பின்பற்றி வருகின்றனர். தற்போது ஜூன் மாதம் துவங்கிய நிலையில் மழை பெய்யாமல் வெயில் நீடித்து வருகிறது. இதனால் பள்ளிப்பட்டு, சித்தால், பெரியகொள்ளியூர், வடமாமாந்தூர், பழையசிறுவங்கூர், பாவந்தூர், சூளாங்குறிச்சி, தண்டலை உட்பட 25க்கும் மேற்பட்ட கிராமங்களில் விவசாயிகள் விளை நிலங்களில் உள்ள கிணறுகளை ஆழப்படுத்தும் பணிகளில் ஆர்வம் காட்டி வருகின்றனர். இதனால் ரிஷிவந்தியம் பகுதியில் எங்கு பார்த்தாலும் கிணறு ஆழப்படுத்தும் பணி நடக்கிறது. ஆண்டு தோறும் 5 அடியில் இருந்து 20 அடி வரை ஆழப்படுத்தி செல்வதால் விவசாயிகள் கடும் சிரமத்திற்கு ஆளாகின்றனர்.

ஆண்டு தோறும் கோடைக்காலம் முடிந்து பருவமழைக்காலம் தொடங்கும் முன் விவசயிகள் கிணறு ஆழப்படுத்தும் பணியில் ஈடுபடுவார்கள். எப்போதும் இல்லாத அளவிற்கு இந்த ஆண்டு தண்ணீர் பஞ்சம் ஏற்பட்டதால் பல பகுதிகளில் விவசாயிகள் கிணற்றை ஆழப்படுத்துவதில் தீவிர ஆர்வம் காட்டி வருகின்றனர். கிணறு ஆழப்படுத்தும் தொழிலாளர்கள் கூலியும் உயர்ந்துள்ளது. நஷ்டத்தை சந்திக்கும் விவசாயிகள் கிணறு வெட்டும் தொழிலாளர்கள் கேட்கும் அளவிற்கு பணம் இல்லாததால் புலம்புகின்றனர். இதனால் கிணறு வெட்டும் தொழிலாளர்களுக்கு தற்போது கிராக்கி உள்ளது. இந்த ஆண்டு பலத்த மழை வந்தால் மட்டுமே விவசாயிகளின் நிலைமை மாறும்.

## 'பச்சை பசேல்' பட்டாணியில் 'அபாய சாயம்'! 'உஷார்' படுத்தும் அதிகாரிகள்

**ஊட்டி** : ஊட்டி அருகே, கடைகளில் விற்கப்படும் பட்டாணியில், நச்சுத்தன்மை நிறைந்த ரசாயனம் கலந்து விற்கப்படுவது, அதிகாரிகளின் சோதனையில் தெரிய வந்துள்ளது.

நீலகிரி மாவட்ட உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாக துறை அலுவலர்கள், நேற்று, ஊட்டி அருகேயுள்ள, காத்தாடி மட்டம், பாலடா, தங்காடு, இத்தலார், மஞ்சூர் பகுதிகளில் உள்ள கடைகளில் 'ரெய்டு' நடத்தினர். இதில், பல கடைகளில், 'பாக்கெட்டுகளில் அடைக்கப்பட்ட காலாவதியான திண்பண்டங்கள், குளிர் பானங்கள், கலப்பட தேயிலை துாள், தடை செய்யப்பட்ட குட்கா, பான்பராக்' என, 40 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான பொருட்கள், பறிமுதல் செய்யப்பட்டன. பல கடைகளில் பாக்கெட்டுகளில் அடைக்கப்பட்ட, 'பச்சை பசேல்' நிற பட்டாணியில், இயற்கையை மிஞ்சும் வகையில், செயற்கை சாயம் கலந்து விற்பனை செய்வதும் தெரியவந்தது.

உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாக துறை நீலகிரி மாவட்ட அலுவலர் டாக்டர் ரவி கூறியதாவது:இயற்கையாக விளையக் கூடிய, பச்சை நிற பட்டாணியை, பலரும் விரும்பி உண்கின்றனர். அவை பாக்கெட்டுகளில் அடைக்கப்பட்டு, கடைகளில் விற்கப்படுகிறது. மக்களுக்கு ஆசையை துாண்டும் நோக்கில், பச்சை நிறத்தை அதிகளவில் சேர்த்து, கடைக்காரர்கள், பட்டாணியில் சாயம் சேர்க்கின்றனர். அதில், 'பிரில்லியன்ட் புளு', 'டாடாரேசைன்' என்ற ரசாயனங்களை அளவுக்கு அதிகமாக சேர்க்கின்றனர். அவற்றை உண்ணும் மக்களுக்கு, கேன்சர், வாய் புண் உட்பட, பல்வேறு வியாதிகள் வர வாய்ப்புள்ளது. பொதுமக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். பள, பளக்கும் பசுமை நிற பட்டாணிகளை வாங்க கூடாது. உற்பத்தியாளர்கள், வியாபாரிகள் இத்தகைய செயலை தவிர்க்க வேண்டும்," என்றார்.

## குன்னூரில் பேரிச்சம் பழ விற்பனை "ஜோர்'

**குன்னூர்** : குன்னூரில் பேரிச்சம் பழம் விற்பனை தற்போது அமோகமாக உள்ளது.

இஸ்லாமிய மக்களின் நோன்பு காலம் துவங்கிய நிலையில், குன்னூரில் பேரிச்சம் பழம் விற்பனை அதிகரித்துள்ளது. ராஜஸ்தான் பேரிச்சம் பழம் கிலோவிற்கு 80 முதல் 120 வரை விற்பனை செய்யப்படுகிறது. அதேபோல, வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்படும் கருப்பு பேரிச்சம் பழம் 180 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. இந்நிலையில், குன்னூரில் உள்ள பழக்கடைகளில் பழங்களாகவே சிவப்பு நிறத்தில் பேரிச்சம் பழம் விற்பனைக்கு வந்துள்ளது. இதன் விற்பனை தற்போது சூடுபிடித்துள்ளது. ஒரு கிலோ 160 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது. இதுகுறித்து வியாபாரி மணிகண்டன் கூறுகையில், "பேரிச்சம் பழம் பல்வேறு மருத்துவ குணம் வாய்ந்ததாக உள்ளது. தற்போது,

நோன்பு காலம் துவங்கியுள்ள நிலையில், இதன் விற்பனை அதிகரித்துள்ளது," என்றார்.

## **பஞ்சப்பள்ளி, சின்னாறு விவசாயிகள் கவலை; ஏமாற்றத்தை தரும் தென்மேற்கு பருவ மழை**

**தர்மபுரி**: தென்மேற்கு பருவமழை ஏமாற்றி வருவதால், பஞ்சப்பள்ளி, சின்னாறு அணை, பாசன பகுதி விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். தர்மபுரி மாவட்டத்தில், காவிரியின் துணை நதியான சின்னாறு மற்றும் தென்பெண்ணையாற்றின் மூலம் விவசாய பணிகள் நடந்து வருகிறது. கிருஷ்ணகிரி மாவட்டம், தளி பகுதியில் இருந்து உற்பத்தியாகும் சின்னாறு, தர்மபுரி மாவட்டத்தில் பாலக்கோடு, பென்னாகரம் ஆகிய தாலுகா பகுதியின் விவசாய நீர் ஆதாரத்துக்கு அடிப்படையாக உள்ளது.

தர்மபுரி மாவட்டத்தின் வட பகுதி எல்லையான மாரண்டஹள்ளியை அடுத்த, பஞ்சப்பள்ளியில் சின்னாற்றின் குறுக்கே, 1978ம் ஆண்டு அணை கட்டப்பட்டது. அணையின் மொத்த கொள்ளவு, 50 கன அடி. அணையின் நீர் கொள்ளவு, 500 மில்லியன் கன அடி. இந்த அணையின் மூலம், 4,500 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகிறது. ஆண்டுதோறும் தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவ மழை காலங்களில் அணையில் நீர் சேமிக்கப்படும். தென்மேற்கு பருவமழை காலங்களில் தளி ஏரி நிரம்பி அதன் பின் பெய்யும் பருவமழையின் போது, தளி ஏரியில் இருந்து வெளியேறும் உபரிநீர் பஞ்சப்பள்ளி சின்னாறு அணையில் தேக்கி வைக்கப்பட்டு, தர்மபுரி மாவட்ட பாசனத்துக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது.இந்தாண்டு, கோடை மழை மற்றும் சில நாட்கள் பெய்த தென்மேற்கு பருவமழையின் காரணமாக தற்போது, அணையில், 17.71 அடி நீர் உள்ளது. ஆனால், தென்மேற்கு பருவ மழை, பஞ்சப்பள்ளி சின்னாறு அணை நீர் பிடிப்பு

பகுதியில் எதிர்பார்த்த அளவு பெய்யவில்லை.இதனால், சின்னாறு அணை பாசன பகுதி விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். ஆனாலும், வரும் நாட்களில், வர்ண பாகவன் கைகொடுக்கும் பட்சத்தில், இந்தாண்டு பஞ்சப்பள்ளி அணை பாசனம் செழிப்படையும் என்ற எதிர்பார்ப்புடன் விவசாயிகள் காத்துள்ளனர். மேலும், ஒகேனக்கல் கூட்டு குடிநீர் திட்டத்தின் கீழ், தர்மபுரி நகராட்சிக்கு குடிநீர் வழங்கப்படுகிறது. எனவே, பஞ்சப்பள்ளி அணையில் இருந்து குடிநீருக்கு, தண்ணீர் எடுப்பதை, தர்மபுரி நகராட்சி நிர்வாகம் நிறுத்த, மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என, இப்பகுதி விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## நெல்லையில் மூன்று அணைகள் கார் பருவ சாகுபடிக்கு திறப்பு

**திருநெல்வேலி**, :நெல்லையில், கடனாநதி, கருப்பாநதி, ராமநதி, அடவிநயினார் கோவில் ஆகிய அணைகளில் இருந்து கார்பருவ சாகுபடிக்காக நேற்று தண்ணீர் திறந்துவிடப்பட்டது.

நிகழ்ச்சியில் கலெக்டர் கருணாகரன் பங்கேற்று அணைநீரை பாசனத்திற்கு திறந்துவைத்தார். வரும் அக்டோபர் 10ம் தேதி வரையிலும் 105 தினங்களுக்கு தண்ணீர் திறந்துவிடப்படும். இதன் மூலம் அம்பாசமுத்திரம், தென்காசி மற்றும் செங்கோட்டை ஆகிய வட்டங்களுக்குட்பட்ட 11 ஆயிரத்து,641 ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெறும். நிகழ்ச்சியில் எம்.பி.,முத்துக்கருப்பன், விவசாய சங்க பிரதிநிதிகள், வேளாண், பொதுப்பணித்துறை அதிகாரிகள் பங்கேற்றனர்.

## வாழையில் இலைப்புள்ளி நோய் தாக்குதல்; விவசாயிகள் கவலை

**கிருஷ்ணகிரி**: காவேரிப்பட்டணம் சுற்றுவட்டார பகுதியில், பயிரிடப்பட்டுள்ள வாழையில், இலைப்புள்ளி நோய் தாக்குதல் அதிகரித்து உள்ளதால், விவசாயிகள் கலக்கமடைந்துள்ளனர்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில், வாழை பரவலாக சாகுபடி செய்யப்படுகிறது. குறிப்பாக ஓசூர், தேன்கனிக்கோட்டை, கிருஷ்ணகிரி, ராயக்கோட்டை மற்றும் காவேரிப்பட்டணம் சுற்றுவட்டார பகுதியில், 2,000 ஏக்கரில் வாழை சாகுபடி செய்யப்படுகிறது. பெரும்பாலும், ஜி.9 ரகத்தை சேர்ந்த பச்சை வாழை மற்றும் பூவன் வாழை, ஏலக்கி போன்ற ரகங்களை விவசாயிகள், சாகுபடி செய்து வருகின்றனர். சமீப காலமாக திசு வளர்ப்பு மூலம் வளர்க்கப்படும் வாழை சாகுபடி அதிகரித்துள்ளது. சொட்டு நீர் பாசனம் மூலம் சாகுபடி செய்யப்படும், திசு வாழை சாகுபடியில், ஒரு ஏக்கரில், 2 லட்சம் ரூபாய் வரை விவசாயிகளுக்கு வருவாய் கிடைக்கிறது. தற்போது, காவேரிப்பட்டணம் சுற்றுவட்டார பகுதியில் சாகுபடி செய்யப்பட்டுள்ள வாழையில், இலைப்புள்ளி நோய் தாக்குதலும், சிறு இலை வைரஸ் நோய் தாக்குதலும் அதிகம் காணப்படுகிறது. இதனால், வாழை விளைச்சல் பெரிதும் பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதால், விவசாயிகள் கலக்கமடைந்துள்ளனர்.

இலைப்புள்ளி நோயை கட்டுப்படுத்தும் முறைகள் குறித்து வேளாண் அதிகாரிகள் கூறியதாவது: நாட்டு ரக வாழையில் மட்டுமே, நோய் தாக்குதல் அதிகம் இருக்கும். "சக்கர்ஸ்' எனப்படும், ஒரு கிழங்கு, மூன்று ரூபாய்க்கும், திசு வளர்ப்பில், ஒரு வாழை செடி, 15 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது. விலை குறைவாக கிடைப்பதால், விவசாயிகள் கிழங்கை வாங்கி, வாழை சாகுபடி செய்கின்றனர். காற்றின் மூலம் பரவும் இலைப்புள்ளி நோய் தாக்கிய இலைகளை முற்றிலும் அகற்றி எரிக்க வேண்டும். மோனோகுரோட்டோபாஸ் மற்றும் கார்பண்டாசிம் மருந்துகளை, 1 லிட்டர் தண்ணீரில், 2 கிராம் கலந்து நோய் பாதித்த இலைகளின் மேல் தெளிக்கலாம். அல்லது, கார்பண்டாசிம் மாத்திரைகளை, நோய் தாக்கிய வாழை மரத்தின் கிழங்கில் ஓட்டை போட்டு உள்ளே வைக்க வேண்டும். இந்த மருந்து தண்ணீரில் கரைந்து வேர் மூலம் சென்று நோயை கட்டுப்படுத்தும். "சிக்கடோக்கா' பூஞ்சைகள் காற்றில் பரவும்

தண்மை கொண்டதால், ஒருங்கிணைந்த நோய் கட்டுப்பாடு முறைகளை விவசாயிகள் கையாண்டால் மட்டுமே, நோயை கட்டுப்படுத்த முடியும். விவசாயிகள் நோய் எதிர்ப்பு தன்மை அதிகமுள்ள திசு வளர்ப்பு வாழை செடிகளை பயன்படுத்த வேண்டும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

## 30 சதவீதம் பால் உற்பத்தியில் பாதிப்பு:தேனி மாவட்டத்தில் கடும் வறட்சி

**தேனி**;தேனி மாவட்டத்தில் நிலவும் கடும் வறட்சியால், பால் உற்பத்தியில் 30 சதவீதம் வரை பாதிக்கப்பட்டுள்ளது. தேனி மாவட்டத்தில், ஒருலட்சத்து 37 ஆயிரத்து 665 பசுமாடுகளும், 6,397 எருமை மாடுகளும், ஒரு லட்சத்து 23 ஆயிரத்து 256 செம்மறி ஆடுகளும், ஒரு லட்சத்து ஆயிரத்து 965 வெள்ளாடுகளும், 12 லட்சத்து 58 ஆயிரத்து 883 நாட்டுக்கோழிகளும், 5977 பன்றிகளும், 17 ஆயிரத்து 760 நாய்களும், 168 குதிரைகளும், 690 கழுதைகளும், 1016 வாத்துக்களும் உள்ளன.

கடந்த நான்கு ஆண்டுகளாகவே மாவட்டத்தில் சரியாக மழை பெய்யவில்லை. இதனால் வனங்களும், வனத்தை ஒட்டிய நிலங்களும் வறண்டு வந்தன. கடந்த 2012ம் ஆண்டு சராசரி மழையில் 30 சதவீதம் மட்டுமே பெய்தது. 2013ம் ஆண்டும், 2014ம் ஆண்டும் கடும் வறட்சி தொடர்கிறது. இதனால் மாவட்டம் முழுவதுமே வறண்டு காணப்படுகிறது. அனைத்து நீர் நிலைகளிலும் தண்ணீர் இல்லாத சூழ்நிலை காணப்படுகிறது.

காடுகள், வயல்கள், தோட்டங்கள் என எல்லாமே வறண்டுள்ளன. தரிசு நிலங்களில் புல் கூட வளரவில்லை. இதனால் மாவட்டத்தில் கால்நடைகளுக்கு பசுந்தீவன தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. மக்காச்சோளம் உட்பட செயற்கை தீவன உணவுகளின் விலைகளும் அதிகரித்துள்ளன. கால்நடைகளுக்கு தேவையான தண்ணீரும் கிடைக்கவில்லை.

இதனால் கால்நடைகளுக்கு உணவு மற்றும் குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் பால் உற்பத்தி கடுமையாக குறைந்து வருகிறது. தற்போதைய நிலையில் எல்லா மாடுகளிலும் 30 சதவீதத்திற்கு மேல் பால் உற்பத்தி குறைந்து விட்டது.

வரும் மாதங்களில் வறட்சி தொடர்ந்தால், 40 சதவீதத்திற்கு மேல் பால் உற்பத்தி குறையும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

பால் உற்பத்தி குறைவால் ஆவின் நிர்வாகம் ஏஜன்ட்களுக்கு சப்ளை செய்யும் ஆவின் பால் அளவை குறைத்துள்ளது. தேனியில் இருந்து மதுரை மாவட்டத்திற்கு வழக்கமாக 80 ஆயிரம் லிட்டர் முதல் ஒன்றேகால் லட்சம் லிட்டர் வரை தினமும் பால் சப்ளையாகி வந்தது. தற்போது 55 ஆயிரம் லிட்டர் முதல் 60 ஆயிரம் லிட்டர் பால் சப்ளையாவதே பெரிய விஷயமாக உள்ளது.

விவசாயிகள் வறட்சி காரணமாக பால் மாடுகளையும், இதர கால்நடைகளையும் வளர்க்க முடியாமல் விற்பனை செய்து வருகின்றனர். 45 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள பால் மாடு, தற்போது விலை குறைந்து 30 ஆயிரத்திற்கு கூட விற்க விவசாயிகள் தயாராக உள்ளனர். அப்படி இருந்தும் மாடுகளை வாங்க யாரும் தயாராக இல்லை. இதனால் விற்கவும் முடியாமல், வளர்க்கவும் முடியாமல் விவசாயிகள் தவிக்கின்றனர்.

தினமணி

**<u>தமிழகம், புதுச்சேரியில் மழைக்கு வாய்ப்பு</u>**

**சென்னை**

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் வெள்ளிக்கிழமை (ஜூலை 4) ஆங்காங்கே மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும் என வானிலை ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது.

அதேவேளையில் கேரளம் மற்றும் கடலோர கர்நாடகத்தில் பல இடங்களிலும், லட்சத்தீவு மற்றும் தெற்கு உள் கர்நாடகாவில் ஒரு சில இடங்களிலும் மழை பெய்யும் என்றும் வானிலை ஆராய்ச்சி மையம் அறிவித்துள்ளது. சென்னையைப் பொருத்தவரை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். மாலை அல்லது

இரவு நேரங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை ஒரு சில இடங்களில் பெய்யும்.

மழை நிலவரம்:

வியாழக்கிழமை காலையுடன் முடிந்த கடந்த 24 மணி நேரத்தில் நாமக்கல் மாவட்டத்தில் 20 மி.மீ, கிருஷ்ணகிரி மாவட்டம் பையூர், திருவாரூர் மாவட்டம் முத்துப்பேட்டை ஆகிய இடங்களில் தலா 10 மி.மீ. மழை பதிவாகியுள்ளது.

சென்னையில் 103 டிகிரி வெயில்: தமிழகத்தில் சென்னை, மதுரை ஆகிய இடங்களில் 103 டிகிரியும், அதிராம்பட்டினத்தில் 102 டிகிரியும், கடலூர், கரூர் பரமத்திவேலூர், தூத்துக்குடி மற்றும் திருச்சி ஆகிய இடங்களில் 100 டிகிரி ஃபாரன்ஹீட்டுக்கும் அதிகமாக வெயில் பதிவாகியுள்ளது.

**ஆண்டுதோறும் புதிய கால்நடை சிகிச்சை மையங்கள்: அமைச்சர் தகவல்**

**சென்ன**




சென்னை வேப்பேரியில் உள்ள சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் வியாழக்கிழமை நடைபெற்ற சர்வதேச கருத்தரங்கம் தொடக்க விழாவில் பங்கேற்ற (இடமிருந்து) தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக மருத்துவமனைகள் இயக்குநர் எஸ்.ஆர். ஸ்ரீநிவாசன், வங்கதேச சிட்டகாங்

கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழக துணைவேந்தர் ஏ.எஸ். மஃபுசுல் பாரி, கால்நடை நலத் துறை செயலர் எஸ். விஜயகுமார், தமிழக கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் டி.கே.எம். சின்னையா, தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக துணைவேந்தர் (பொறுப்பு) டி.ஜே. ஹரிகிருஷ்ணன், அமெரிக்க விர்ஜீனியா மேரிலாண்ட் கால்நடை மருத்துவக் கல்லூரி இணைப் பேராசிரியர் இளங்குமரன் சுப்பையா, சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி டீன் எஸ்.ஏ. அசோகன்.

தேசிய வேளாண் ஆணையத்தின் பரிந்துரைப்படி தமிழகத்தில் 3,255 கால்நடை மருத்துவ சிகிச்சை மையங்கள் இருக்க வேண்டும் என தமிழக கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் டி.கே.எம். சின்னையா கூறினார்.

இந்தப் பரிந்துரையை அமலாக்கும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் புதிய கால்நடை சிகிச்சை மையங்களை தமிழக அரசு உருவாக்கி வருகிறது என்றும் அவர் கூறினார்.

அடுத்த தலைமுறை கால்நடை மருத்துவ மாணவர்கள், சிகிச்சை தொடர்பான சவால்களை எதிர்கொள்ள உதவும் 6-உவது சர்வதேச கருத்தரங்கு தொடக்க விழா சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் வியாழக்கிழமை நடைபெற்றது.

இதில் அமைச்சர் டி.கே.எம். சின்னையா பேசியது:

தமிழகத்தில் இப்போது கால்நடைகளுக்காக 6 பல்நோக்கு மருத்துவமனைகள், 22 சிகிச்சை மையங்கள், 130 கால்நடை மருத்துவமனைகள், 1,671 மருந்தகங்கள், 585 கிராமப்புற கால்நடை மருந்தகங்கள், 56 நடமாடும் சிகிச்சை நிலையங்கள் என மொத்தம் 2,479 கால்நடை சிகிச்சை மையங்கள் உள்ளன.

தேசிய வேளாண் ஆணையத்தின் (என்.சி.ஏ.) பரிந்துரைப்படி 5 ஆயிரம் கால்நடைகளுக்கு ஒரு கால்நடை சிகிச்சை மையம் மற்றும் மருந்தகம் இருக்க வேண்டும். கால்நடைகளின் உடல் நலனை உறுதிப்படுத்த இந்தப் பரிந்துரை அமல்படுத்துவது அவசியம் எனத் தெரிவித்திருந்தது.

இந்தப் பரிந்துரைப்படி தமிழகத்தில் மொத்தமுள்ள 1 கோடியே 62 லட்சத்து 74 ஆயிரம் கால்நடைகளுக்கு 3,255 கால்நடை சிகிச்சை மையம் மற்றும் மருந்தகங்கள் இருக்க வேண்டும். ஆனால், 2,479 சிகிச்சை மையங்களே உள்ளன.

இந்த இடைவெளியைப் போக்க ஒவ்வொரு ஆண்டும் புதிய சிகிச்சை மையங்கள் மற்றும் மருந்தகங்களை தமிழக அரசு உருவாக்கி வருகிறது. இதன் ஒரு பகுதியாக கடந்த 2013-14 ஆண்டில் 100 துணை மருந்தகங்கள், கால்நடை மருந்தகங்களாக தரம் உயர்த்தப்பட்டன என்றார் அமைச்சர் சின்னையா.

வங்கதேச சிட்டகாங் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக துணைவேந்தர் மஃபுசுல் பாரி பேசியது:

அடுத்த தலைமுறை கால்நடை மருத்துவர்கள் மிகப் பெரிய சவால்களை சந்திக்க வேண்டிய சூழல் உருவாகி வருகிறது. ஏனெனில், பருவநிலை மாற்றம், உலக வெப்பமயமாதல் காரணங்களால் புதிய கால்நடை நோய்கள் உருவாகி வருகின்றன.

வங்கதேசத்தில் இப்போது எலிகளிலிருந்து பரவும் நிஃபா என்ற புதிய வைரஸ் பாதிப்பு கால்நடைகளுக்கு ஏற்பட்டு வருகிறது.

அவ்வப்போது பறவைக் காய்ச்சலும் ஏற்படுகிறது.

இவை மட்டுமின்றி கால்நடை உணவுப் பாதுகாப்பு என்பது மிகப் பெரிய சவாலாக அமையப் போகின்றது. சிறந்த கால்நடை மருத்துவ ஆசிரியர்களுக்கு தேவை அதிகரித்து வருகிறது.

எனவே, கால்நடை மருத்துவ மாணவர்கள் இந்த சவால்களை எதிர்கொள்ளும் வகையில் தங்களைத் தயார்ப்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார்.

விழாவில், தமிழக கால்நடை நலத் துறை செயலர் எஸ். விஜயகுமார் கருத்தரங்கு மலரை வெளியிட்டார்.

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக பதிவாளர் மற்றும் துணைவேந்தர் (பொறுப்பு) டி.ஜே. ஹரிகிருஷ்ணன், அமெரிக்க விர்ஜீனியா மேரிலேண்ட் கால்நடை மருத்துவக் கல்லூரி இணைப் பேராசிரியர் இளங்குமரன் சுப்பையா உள்ளிட்டோர் பேசினர்.

**ராமநாதபுரம் மாவட்டத்தில் மீன் பண்ணைக்காக 39.01 ஏக்கர்**

**சென்னை**

ராஜீவ்காந்தி கடல்வாழ் உயிரின மையத்துக்காக ராமநாதபுர மாவட்டம் கடலூர் கிராமத்தில் உள்ள குறிஞ்சித் தோப்பை குத்தகைக்கு விடுவதற்கு அனுமதி வழங்கிய உத்தரவை ரத்து செய்யக் கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் பொதுநல மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த மனுவுக்கு இரண்டு வாரங்களுக்குள் பதில் அளிக்குமாறு மத்திய, மாநில அரசுகளுக்கு நோட்டீஸ் அனுப்ப உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்ரபாக, ராமநாதபுரம் மாவட்டம் கடலூர் பகுதியைச் சேர்ந்த ஏ.ஆரோக்கியசாமி உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த பொதுநல மனு விவரம்: ராமநாதபுரம் மாவட்டம் கடலூர் கிராமம்தான் எனது சொந்த ஊர். நான் விவசாயம் செய்கிறேன். எங்களது கிராமத்தில் 300-க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் வசிக்கின்றனர்.

அவர்களும் விவசாயிகள்தான். மற்றவர்கள் மீன் தொழில் செய்கின்றனர். எங்கள் ஊர் கடல் பகுதியில், மிகப் பெரிய மணல் திட்டு உள்ளது. அதை குறிஞ்சித் தோப்பு என்று அழைப்பர்.

இயற்கையான இந்த மணல் திட்டு பல நூற்றாண்டுகளுக்கு முன்பு அலைகளால் தோன்றியது. இந்த மணல் திட்டு 39.01 ஏக்கர் பரப்பளவில் உள்ளது. இதன் மூலம் கடல் நீர் எங்கள் கிராமம் மற்றும் இதர கிராமங்களுக்குள் வருவது தடுக்கப்படுகிறது.

கடந்த 2004-ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமியினால் ஏற்பட இருந்த பெரிய ஆபத்து இந்த மணல் திட்டு மூலம் தடுக்கப்பட்டது.

அந்தப் பாதிப்பில் இருந்து நாங்கள் தப்பித்ததில் இந்த மணல் திட்டுக்கு முக்கியப் பங்கு உள்ளது. எங்கள் கிராமத்தில் மொத்தம் 1000 முதல் 1500 பேர் வசிக்கின்றோம். 500 ஏக்கருக்கு மேற்பட்ட நிலம் விவசாயத்துக்காக பயன்படுத்தப்படுகிறது.

எங்கள் விவசாய நிலங்களில் கடல் நீர் புகுந்துவிடாமல் இந்த மணல் திட்டு பாதுகாத்து வருகிறது.

இது எங்களுக்கு ஒரு சுற்றுச் சுவர் போல் அமைந்துள்ளது. இதனால் எங்கள் கிராமம் உள்பட பல கிராமங்கள் நன்மை அடைந்து வருகின்றன. இந்த நிலையில் மீன் பண்ணை அமைப்பதற்காக ராஜீவ்காந்தி கடல்வாழ் உயிரின மையத்துக்கு இந்த குறிஞ்சித் தோப்பை குத்தகைக்கு விட ராமநாதபுர மாவட்ட ஆட்சியர் நடவடிக்கை எடுத்து வருகிறார்.

இது தொடர்பாக தூத்துக்குடியிலிருந்து வந்த மீன்வளத் துறை அதிகாரிகள் குறிஞ்சித் தோப்பை ஆய்வு செய்தனர்.

எனவே, ராஜீவ்காந்தி கடல்வாழ் உயிரின மையத்துக்காக, எங்கள் கிராம குறிஞ்சித் தோப்பை குத்தகைக்கு விடுவதற்கு வழங்கிய அனுமதியை ரத்து செய்ய வேண்டும் என மனுவில் கோரப்பட்டது.

இந்த மனு தலைமை நீதிபதி (பொறுப்பு) சதீஷ் கே.அக்னிஹோத்ரி, நீதிபதி எம்.எம்.சுந்தரேஷ் ஆகியோர் அடங்கிய முதல் அமர்வு முன்பு வியாழக்கிழமை (ஜூலை 3) விசாரணைக்கு வந்தது.

இந்த மனுவுக்கு இரண்டு வாரங்களுக்குள் பதில் அளிக்குமாறு மத்திய, மாநில அரசுகளுக்கு நோட்டீஸ் அனுப்ப நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

**கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் நெல் நடவுப் பணி தீவிரம்**

**கம்பம்,**

கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில், விவசாயிகள் நடவு பணியில் தீவிரம் காட்டி வருகின்றனர்.

கம்பம் பள்ளத்தாக்கில், உத்தமபாளையம், போடி, தேனி ஆகிய பகுதிகளில் அரசு பதிவு பெற்று 14,707 ஏக்கர்களில் 2 போகம் நெல் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

ஆண்டுதோறும் கம்பம் பள்ளத்தாக்கு பகுதியின் முதல் போக நெல் சாகுபடிக்கு ஜூன் முதல் வாரத்தில் தண்ணீர் திறப்பது வழக்கம். ஆனால், கடந்த 4 ஆண்டுகளாக கேரளாவில் தென் மேற்கு பருவமழை பொய்த்ததால், முதல் போக பாசனத்துக்கு தண்ணீர் திறப்பதில் காலதாமதம் ஏற்பட்டு வந்தது.

இந்தாண்டு, ஜூன் முதல் நாளில் பாசனத்துக்காக முல்லைப் பெரியாறு அணையிலிருந்து, தமிழக நிதி அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் தண்ணீர் திறப்பை தொடங்கி வைத்தார். முல்லைப் பெறியாற்றிலிருந்து தண்ணீர் பெறும் 17 கால்வாய்கள் மூலம், விவசாயிகளும் தங்களது வயல்களில் நாற்றங்கால் அமைத்திருந்தனர். ஆனால், அணையில் நீர் இருப்பு குறைவாக இருப்பதாலும், தென்மேற்கு மழை பெய்யாததாலும் விவசாயிகள் நடவு பணியை துவங்காமல் மழைக்காக காத்திருந்தனர்.

ஆனால், நாற்றங்காலிலிருந்து நாற்றை எடுத்து 25 நாள்களுக்குள் வயலில் நடவேண்டும். இல்லெயனில் நாற்று பயன்படாமல் போய்விடும். மே மாத இறுதியில் சில விவசாயிகள் நாற்றங்கால் அமைத்தால், நாற்று வீணாகி விடும் என்ற நிலையில் தற்போது, முதல் போக நடவு பணியை தீவிரப்படுத்தி உள்ளனர்.

இதில் குள்ளப்பகவுண்டன்பட்டி, நாராயணத்தேவன்பட்டி, உத்தமபாளையம், குச்சனூர், கம்பம், கூடலூர், சாமாண்டிபுரம், காமயகவுண்டன்பட்டி, சுருளிப்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் விவசாயிகள் நாற்று நடும் பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். அதேபோல், உத்தமபாளையம் பகுதியில் கிணற்று பாசன

விவசாயிகளும் முதல் போக நடவு பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். கடந்தாண்டு இரண்டாம் போகம் நெல் பயிரிடப்பட்டு, போதிய தண்ணீர் இல்லாததால் பாதியிலேயே பயிர் கருகியதால், விவசாயிகள் பாதிப்படைந்தனர். எனவே இந்தாண்டு முதல் போகம் விரைவில் பயிரிட்டு, குறிப்பிட்ட காலத்தில் அறுவடை செய்யும் நோக்கத்தில் நூற்றுக்கணக்கான பெண்களை கொண்டு நடவு பணியை மேற்கொண்டு வருகின்றனர்.

## மழை நீர் சேகரிப்பு குறித்த செயல் விளக்கம்

### திருப்பத்தூர்

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் பேருந்து நிலையத்தில் வியாழக்கிழமை மழைநீர் சேகரிப்பு மாதிரி கட்டமைப்பு செயல் விளக்க கண்காட்சி நடைபெற்றது.

திருப்பத்தூர் பேருந்து நிலையத்தில் வியாழக்கிழமை நடைபெற்ற மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி மற்றும் மழைநீர் சேகரிப்பின் அவசியம் குறித்த மாதிரி கட்டமைப்பு செயல்விளக்க கண்காட்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு திருப்பத்தூர் பேரூராட்சித் தலைவர் ஆர்.சோமசுந்தரம் தலைமை வகித்து மாதிரி கட்டமைப்பு செயல்விளக்கக் கண்காட்சியினை தொடக்கி வைத்தார். தொடர்ந்து மக்கள் மழைநீர் சேகரிப்பின் அவசியத்தை மனதில் கொண்டு வீடு கட்டமைப்புப் பணிகளில் மழைநீர் தொட்டி அமைக்க முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். மேலும் இக்கண்காட்சியில் காட்டப்பட்டுள்ள கட்டமைப்பு செயல்விளக்க

வடிவமைப்பினை பின்பற்றும் படியும் கேட்டுக் கொள்ளப்பட்டது. மேலும் இந்நிகழ்ச்சியில் சுகாதார ஆய்வாளர் தங்கதுரை, பேரூராட்சி களப் பொறியாளர் முத்துக்குமார், கவுன்சிலர்கள் செந்தில்குமார், ஆனந்தன், மற்றும் அ.தி.மு.க. நகரத் துணைச் செயலாளர் பிரேம்குமார், ஜெயபாலன், நல்லதம்பி, பிரபாகர், உள்ளிட்டோர் பங்கு கொண்டனர்.

## <u>அலங்கார மீன் வளர்க்க தகுதியுடையோர் விண்ணப்பிக்கலாம்: ஆட்சியர்</u>

**ராமநாதபுரம்**

அரசு மானியத்துடன் கூண்டுகளில் மீன்வளர்ப்பு மற்றும் அலங்கார மீன் வளர்ப்பு மேற்கொள்ளத் தகுதியுடைய பயனாளிகள் விண்ணப்பிக்கலாம் என ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் க.நந்தகுமார் வியாழக்கிழமை கேட்டுக் கொண்டார்.

செய்திக்குறிப்பு: ராமநாதபுரம் மாவட்டத்தில் மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி திட்டத்தின் கீழ் அரசு மானியத்துடன் கூண்டுகளில் மீன்வளர்ப்பு மற்றும் அலங்கார வண்ண மீன்களின் வளர்ப்பை மேற்கொள்ளத் தகுதியான பயனாளிகளிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இத்திட்டத்தின் மூலம் பயனடையும் விண்ணப்பதாரர் இம்மாதம் முதல் தேதியிலிருந்து 50 வயதுக்கு குறைவானவராக இருக்க வேண்டும். மீனவர் கூட்டுறவு சங்க உறுப்பினர்கள், விசைப்படகு உரிமையாளர்கள், மீன்வளர்ப்பு பயிற்சி பெற்றவர்கள், மீன்வள பட்டயப்படிப்பு முடித்தவர்கள் ஆகியோருக்கு முன்னுரிமை அளிக்கப்படும். பயனாளிகளின் தேர்வு, தகுதி மற்றும் முன்னுரிமைகளின் அடிப்படையில் நடைபெறும்.விருப்பமுள்ள பயனாளிகள் மீன்வள உதவி இயக்குநர் (வடக்கு) ராமநாதபுரம் அலுவலகத்தை தொடர்பு கொண்டு விண்ணப்பத்தினை இம்மாதம் 18 ஆம் தேதிக்குள் அளிக்கும்படி அச்செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## <u>ஆதிவாசிகள் நிலங்களை மீட்க விவசாயிகள் சங்கம் வலியுறுத்தல்</u>

**கோவை,**

தமிழகத்தில் ஆதிவாசிகளுக்கு வழங்கப்பட்ட நிலங்களை மீட்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென, தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்டத் தலைவர் சு.பழனிசாமி தலைமையில் கோவை ஜீவா இல்லத்தில் மாவட்ட குழுக் கூட்டம் புதன்கிழமை நடைபெற்றது.

இதில், கோவை மாவட்டத்தின் மேற்குத் தொடர்ச்சி மலையை ஒட்டியுள்ள பகுதிகளில் இருளர், மலசர், மலை மலசர், தோடர், மலையாளி, எரவாளர்

உள்ளிட்ட சாதிகளைச் சேர்ந்த ஆதிவாசி மக்கள் வசித்து வருகின்றனர். அவர்களுக்கு 1984-இல் தமிழக அரசு சார்பில் மலையோர தரிசு நிலங்கள் இலவசமாக வழங்கப்பட்டன.

ஆனால், தற்போது பெரும் பகுதி நிலத்தை சிலர் ஏமாற்றி குறைந்த விலைக்கு வாங்கியுள்ளனர். இந்த நிலம் தற்போது ரியல் எஸ்டேட் நிறுவனங்களுக்கும், கல்வி நிறுவனங்களுக்கும் கைமாறியுள்ளன. அதனை தமிழக அரசு மீட்டு சம்பந்தப்பட்ட ஆதிவாசிகளிடம் ஒப்படைக்க வேண்டும்.

கோவை மாவட்டத்தில் நொய்யல் நதி, சிற்றோடைகள் மற்றும் யானை வழித்தடங்களை கல்வி நிறுவனங்கள், வழிபாட்டுத் தலங்கள், ரியல் எஸ்டேட் நிறுவனங்கள் ஆக்கிரமித்துள்ளன. இதை, தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் முதல்வருக்கும், மாவட்ட ஆட்சியருக்கும் எழுத்து மூலமாகவும், விவசாயிகள் குறைதீர் கூட்டம் மூலமாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வரும் சட்டப்பேரவை கூட்டத் தொடரின்போது மலைப் பிரதேசங்கள், நீர் நிலைகள், அருவிகளைப் பாதுகாக்கும் வகையில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆணையம் ஏற்படுத்தப்படும் என அறிவிக்க வேண்டும்.

கால்நடைத் தீவனங்கள், விதைகள், இடுபொருள்கள், உரங்கள் பாரபட்சமின்றி கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் ஆகஸ்டில் திருச்சியில் நடைபெறவுள்ள மாநில மாநாட்டில் கோவையில் இருந்து 300-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொள்வது, கோவை மாவட்ட விவசாயிகள் மாநாட்டை ஜூலை 27-ஆம் தேதி காரமடையில் நடத்துவது என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## வேளாண் பல்கலைக்கழகத்தில் விவசாயிகள், அலுவலர்களுக்குப் பயிற்சி

**கோவை,**

கோவை தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் மற்றும் வேளாண் அறிவியல் நிலையங்களில், விவசாயிகள் மற்றும் அலுவலர்களுக்குப் பயிற்சியளிக்க மத்திய அரசு நிதி உதவி செய்துள்ளது.

சந்தை வழி விரிவாக்கச் செயல்பாடுகள் என்ற தலைப்பில் வேளாண் அமைச்சகம் மத்திய அரசின் நிதி உதவியோடு 65 பயிற்சிகள் நடத்த உள்ளது. இதில், 60 பயிற்சிகள்

விவசாயிகளுக்கும், 5 பயிற்சிகள் அலுவலர்களுக்கும் நடத்தப்படும்.

மொத்தமாக 1500 விவசாயிகள் மற்றும் 100 அலுவலர்களுக்கு கோவை தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் மற்றும் வேளாண் பல்கலைக்கழகத்தின் 14 வேளாண் அறிவியல் நிலையங்கள் மூலமாக பயிற்சியளிக்கப்பட உள்ளது.

வேளாண் விற்பனையில் விளைபொருள் ஆர்வலர் குழுக்களின் பங்கு, பழங்கள் மற்றும் காய்கறிகள் உற்பத்தியில் நன்னெறி வேளாண் உத்திகள், சந்தை செய்திகளை பரவலாக்குதல், தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தில் இயங்கி வரும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தை தகவல் மையச் செயல்பாடுகள், உழவர்களை சந்தை, தொழிற்சாலை மற்றும் நிதி நிறுவனங்களுடன் இணைத்தல், அங்கக வேளாண்மை மற்றும் சான்றளிப்பு, சந்தை இடர்பாடுகளைத் தடுப்பதில் முன்பேர வர்த்தகம் போன்ற தலைப்புகளில் பாடங்கள் நடத்தப்படும்.

நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கம், மேட்டுப்பாளையம், துடியலூர், வேளாண் இடுபொருள் கூட்டுறவு விற்பனைச் சங்கம் ஆகிய இடங்களுக்குச் சென்று அனுபவம் பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இப் பயிற்சிகள் விரிவாக்க அலுவலர்கள், வேளாண் விற்பனை அலுவலர்கள் மற்றும் விவசாயிகளுக்கு வேளாண் விற்பனையை சிறப்பாகச் செய்வதற்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்று, வேளாண் பல்கலை. செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கறிக்கோழி பண்ணைக் கொள்முதல் விலையில் மாற்றமில்லை**

**பல்லடம்,**

தமிழகம் மற்றும் கேரள மாநிலங்களில் கறிக்கோழி விற்பனை மார்க்கெட் நிலவரத்துக்கேற்ப திருப்பூர் மாவட்டம் பல்லடத்தை தலைமையிடமாக கொண்டு செயல்படும் பி.சி.சி.(பிராய்லர் கோர்டினேஷன் கமிட்டி) தினந்தோறும் பண்ணைக்கொள்முதல் விலையை நிர்ணயம் செய்கிறது.

புதன்கிழமை பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ. 70 ஆக இருந்தது. விற்பனையில் மாற்றம் எதுவும் இல்லாததால் வியாழக்கிழமையும் அதே விலை நிர்ணயம் செய்யப்பட்டது.

முட்டை விலை: நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு வியாழக்கிழமை அறிவித்த முட்டைப் பண்ணைக் கொள்முதல் விலை நாமக்கல்லில் ரூ. 3.65, சென்னையில் ரூ. 3.98.

**ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் கொப்பரை ஏலம்**

**வெள்ளக்கோவில்**

வெள்ளக்கோவில் ஒழுங்கு முறை விற்பனைக்கூடத்தில் புதன்கிழமை நடைபெற்ற கொப்பரை ஏலத்தில் ரூ. 22.78 லட்சத்துக்கு ஏலம் நடைபெற்றது.

வெள்ளக்கோவில், கோவை சாலையிலுள்ள மாவட்ட ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் வாரந்தோறும் புதன்கிழமை

கொப்பரை ஏலம் நடைபெற்று வருகிறது. உள்ளூர், வெளி மாவட்டங்களிலிருந்து பல விவசாயிகள் கொப்பரைகளைக் கொண்டு வருகின்றனர். இதில், ஈரோடு, தாராபுரம், காங்கயம் பகுதிகளிலிருந்து வருபவர்கள் அதிகளவில் கொப்பரைகளைக் கொள்முதல் செய்கின்றனர்.

இந்த வாரம் நடைபெற்ற ஏலத்திற்கு, கொப்பரை 501 மூட்டைகள் வந்திருந்தன. முதல் தர கொப்பரை கிலோவுக்கு, ரூ. 81.65 முதல் ரூ.97.85 வரை ஏலம் போனது. இது கடந்த வாரத்தை விட 75 பைசா அதிகமாகும். கடந்த வாரம் 391 மூட்டைகள் மட்டுமே வந்திருந்தன.

**விவசாயிகளுக்கு வேளாண் இடுபொருள்கள்**

**அரக்கோணம்**

அரக்கோணத்தை அடுத்த நெமிலியில் வேளாண் துறை சார்பில் திருந்திய நெல் சாகுபடி செய்த விவசாயிகளுக்கு அரசு உதவித் தொகை வழங்கும் விழா, வேளாண் இடுபொருள்கள் வழங்கும் விழாவாக வியாழக்கிழமை நடைபெற்றது.

விழாவுக்கு நெமிலி வட்டார வேளாண் உதவி இயக்குநர் எம்.பி.தீட்சித் தலைமை தாங்கினார். உதவி வேளாண் அலுவலர் ரா.தென்னரசன் வரவேற்றார். திருந்திய நெல் சாகுபடி செய்த 630 விவசாயிகளுக்கு அரசு உதவித் தொகைகளை அரக்கோணம் எம்பி கோ.அரி, எம்எல்ஏ சு.ரவி ஆகியோர் வழங்கினர். மேலும் மானிய விலையிலான விசைதெளிப்பான், கைதெளிப்பான், விதை உளுந்து ஆகியவற்றையும் எம்பி மற்றும் எம்எல்ஏ வழங்கினர். இதில் வேலூர் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவர் ஏ.ஜி.விஜயன், நெமிலி ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் கோமதி மணிவண்ணன், துணைத்தலைவர் சங்கர், மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள் மணி, சேகர், அதிமுக மாவட்ட பொருளாளர் மணிவண்ணன், வேளாண் அலுவலர் தே.பிரபுதாஸ், துணை வேளாண் அலுவலர் சி.கோதண்டன், உதவி வேளாண் அலுவலர் சி.முரளி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**<u>வேளாண்மைத் தொழில்நுட்பங்கள் குறித்த விழிப்புணர்வுப் பயிற்சி</u>**

**தருமபுரி,**

பாலக்கோடு வட்டம், வாழைத்தோட்டம் கிராமத்தில் நவீன வேளாண்மைத் தொழில்நுட்பங்கள் குறித்து கிராம அளவிலான விவசாயிகள் பங்கேற்ற விழிப்புணர்வுப் பயிற்சி இரண்டு நாள்கள் நடைபெற்றன.

பயிற்சி முகாமிற்கு தலைமை வகித்த உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை துணை இயக்குநர் பெ.பாஸ்கர் பேசியது: விவசாயத்துக்கு முக்கிய ஆதாரமாக விளங்கும் நீர், நில வளத்தை மேம்படுத்த ஒருங்கிணைந்துச் செயல்பட வேண்டும். இன்றைய சூழலில் கிடைக்கிற மழைநீரை வீணாக்காமல் தங்களது நிலங்களில் சேமிக்க சரிவுக்கு குறுக்கே ஐந்து கலப்பை மூலம் உழவு செய்யலாம்.

பயிர் செய்யாத காலங்களில் சரிவுக்கு குறுக்கே ஆழமாக உழவு செய்வதன் மூலம் பெய்யக் கூடிய மழைநீர் வழிந்தோடி வீணாகாமல் அந்தந்த நிலத்தில் உள்நோக்கி பாய்ந்து வறட்சிக் காலங்களில் பயிர்கள் வறட்சியைத் தாங்கி வளரும் தன்மை அதிகரிக்கிறது என்றார் அவர்.

உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை அலுவலர் புவனேஸ்வரி மானாவாரி சாகுபடி தொழில் நுட்பங்கள் குறித்தும், லாபகரமான முறையில் கறவை மாடுகள் வளர்ப்பு குறித்து குண்டல்பட்டி கால்நடை ஆராய்ச்சி, பயிற்சி மைய உதவிப் பேராசிரியர் முனைவர் சந்தோஸ்குமார் எடுத்துரைத்தனர்.

அதேபோல, வேளாண்மைத் துறை சார்பில் விவசாயிகளுக்கு அளிக்கப்படும் மானியம் குறித்து பாலக்கோடு வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் முருகன் எடுத்துக் கூறினார்.

வேளாண்மை அலுவலர்கள் பழனிவேல், உமாமகேஸ்வரி, துணை வேளாண்மை அலுவலர் சண்முகதேவன், உதவி வேளாண்மை அலுவலர் கோவிந்தன் ஆகியோர் வேளாண் துறை திட்டங்கள், மண் மாதிரி எடுத்தல், ஒருங்கிணைந்த பூச்சி நோய் நிர்வாக முறைகள், பாதுகாப்பான முறையில் பூச்சிக்கொல்லி மருந்துகளை கையாளும் விதம் குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தனர்.

ஏற்பாடுகளை உழவர் விவாதக் குழு அமைப்பாளர் தோட்டராமன், உழவர் நண்பர் சின்னசாமி, வேளாண்மை விரிவாக்கத் துணை இயக்கப் பணியாளர்கள் செய்து இருந்தனர்.

## <u>நாமக்கல்லில் பருத்தி மூட்டைகள் ரூ.7 லட்சத்துக்கு ஏலம்</u>

**நாமக்கல்**

நாமக்கல்லில் நடைபெற்ற பருத்தி ஏலத்தில் 360 மூட்டை பருத்திகள் ரூ.7 லட்சத்துக்கு வியாழக்கிழமை ஏலம்போயின.

நாமக்கல்லில் திருச்செங்கோடு சாலையிலுள்ள கூட்டுறவு வேளாண் விற்பனை நிலையத்தில் வாரம் தோறும் வியாழக்கிழமை பருத்தி ஏலம் நடைபெறுகிறது. இந்த

ஏலத்துக்கு நாமக்கல் மாவட்டம் மட்டுமின்றி, சேலம், திருச்சி, கரூர் மாவட்டங்களில் இருந்தும் விவசாயிகள் பருத்திகளை விற்பனைக்கு கொண்டு வருகின்றனர்.

இதன்படி, வியாழக்கிழமை நடைபெற்ற ஏலத்துக்கு மொத்தம் 360 பருத்தி மூட்டைகளை விவசாயிகள் விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். இதில், ஆர்சிஹெச் ரகம் ஒரு குவிண்டால் ரூ.5,100 முதல் ரூ.5,369 வரையும், டிசிஹெச் ரகம் ரூ.5,800 முதல் ரூ.6,104 வரையும், சுரபி ரூ.6,100 முதல் ரூ.6,469 வரையும் என மொத்த பருத்தி மூட்டைகளும் ரூ.7 லட்சத்துக்கு ஏலம் போனதாக கூட்டுறவு விற்பனை நிலைய அலுவலர்கள் தெரிவித்தனர்.

கடந்த வாரம் (ஜூன் 26) நடைபெற்ற ஏலத்துக்கு 300 மூட்டை பருத்திகள் வந்ததில், ஆர்சிஹெச் ரகம் ஒரு குவிண்டால் ரூ.4,850 முதல் ரூ.5,350 வரையும், டிசிஹெச் ரகம் ரூ.5,300 முதல் ரூ.5,555 வரையும், சுரபி குவிண்டால் ரூ.5,350 முதல் ரூ.5,740 வரையும் என மொத்த பருத்தி மூட்டைகளும் ரூ.5.30 லட்சத்துக்கு விற்பனையானது குறிப்பிடத்தக்கது.

கடந்த வாரத்தை விட விலை உயர்ந்ததால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

**தேங்காய் பருப்பு விலை குறைவால் விவசாயிகள் கவலை**

**பரமத்தி வேலூர்**

பரமத்தி வேலூர் விற்பனைச் சந்தையில் வியாழக்கிழமை தேங்காய் பருப்பு விலை குறைந்ததால், விவசாயிகள் கவலையடைந்தனர்.

பரமத்தி வேலூர் வட்டத்தில், சோழசிராமணி, ஜேடர்பாளையம், அய்யம்பாளையம், பிலிக்கல்பாளையம், கபிலர்மலை, பாண்டமங்கலம், பொத்தனூர், வேலூர், அனிச்சம்பாளையம், பாலப்பட்டி, மோகனூர் உள்ளிட்ட சுற்றுப் பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் விசாயிகள் தென்னை சாகுபடி செய்துள்ளனர். இதில் உற்பத்தி செய்யப்படும் தேங்காய் பருப்புகளை பரமத்தி வேலூர் சந்தையில் வியாழக்கிழமை விற்பனை செய்கின்றனர்.

கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற ஏலத்தில் ஒரு கிலோ ரூ. 85.69 முதல் ரூ.91.16 வரை ஏலம் போனது.

சராசரி விலையாக ஒரு கிலோ ரூ.88.92-க்கு ஏலம் போனது. வியாழக்கிழமை நடைபெற்ற ஏலத்திற்கு மொத்தம் 1,169 கிலோ தேங்காய் பருப்பை விவசாயிகள் விற்பனைக்கு கொண்டு வந்தனர். இதில், ஒரு கிலோ ரூ.86.59 முதல் ரூ.90.59 வரை ஏலம்போனது. சராசரி விலையாக ரூ.88.59-க்கு ஏலம் போனது. வரத்து அதிகமானதால் தேங்காய் பருப்பின் விலை குறைந்ததாக விவசாயிகள் தெரிவித்தனர். விலை குறைந்ததால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

## <u>விவசாயிகளுக்கு வேளாண் இடுபொருள்களை தட்டுப்பாடின்றி வழங்க ஆட்சியர் உத்தரவு</u>

**நாமக்கல்**

நாமக்கல் மாவட்டத்தில் உணவு தானிய உற்பத்தி இலக்கை முழுமையாகப் நிறைவு செய்ய விவசாயிகளுக்கு வேளாண் இடுபொருள்களைத் தட்டுப்பாடின்றி வழங்க வேண்டும் என்று தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கச் செயலர்களுக்கு நாமக்கல் மாவட்ட ஆட்சியர் வி.தட்சிணாமூர்த்தி உத்தரவிட்டார்.

தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கச் செயலர்களுக்கான உரங்கள் இருப்பு, விற்பனை தொடர்பான கலந்தாய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சியர் வி.தட்சிணாமூர்த்தி தலைமையில் நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் புதன்கிழமை நடைபெற்றது.

கூட்டத்தில் ஆட்சியர் பேசியது:

நாமக்கல் மாவட்டத்துக்கு நிகழாண்டு 2,770 லட்சம் மெட்ரிக் டன்கள் உணவு தானிய உற்பத்தி இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த இலக்கை அடைய வேளாண் இடுபொருள்களான உரங்களை பருவம் தொடங்குவதற்கு முன்பே அனைத்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களிலும் இருப்பு வைக்க வேண்டும். தவிர, சூப்பர் பாஸ்பேட், பொட்டாஷ், நீரில் கரையும் உரங்கள், வேப்பம் புண்ணாக்கு உரங்களை விவசாயிகளின் தேவையறிந்து இருப்பு வைத்து

தட்டுப்பாடின்றி விவசாயிகளுக்கு உரங்கள் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

தொடர்ந்து, ஆட்சியரின் நேர்முக உதவியாளர் கிருஷ்ணகுமார் (வேளாண்மை), தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் வாரியாக உரங்கள் இருப்பு குறித்து ஆய்வு செய்ததுடன், இருப்பு இல்லாத கூட்டுறவுச் சங்கங்களை உடனடியாகத் தேவையான உரங்களை இருப்பு வைக்க அறிவுறுத்தினர்.

மேலும், உரங்களின் இருப்பு குறித்த அறிக்கையை மாதம்தோறும் 20-ஆம் தேதிக்குள் சம்பந்தப்பட்ட வட்டார வேளாண்மை உதவி இயக்குநரிடம் அளிக்க வேண்டும் என்று வேளாண்மை துணை இயக்குநர் லோகநாதன் (மத்திய திட்டம்) கேட்டுக் கொண்டார். நாமக்கல் மாவட்டத்தில் எவ்வித புகார்களுக்கும் இடமளிக்காமல் உரங்களை விவசாயிகளுக்கு வழங்க வேண்டும் என்று துணைப் பதிவாளர் கூறினார். கூட்டத்தில், வேளாண்மை உதவியக்குநர் ஜெகதீசன், இப்கோ நிறுவனம், கோரமண்டல் நிறுவன விற்பனை பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

## <u>திருமானூரில் குறுவை சாகுபடிப் பணிகள் ஆய்வு</u>

அரியலூர்,

அரியலூர் மாவட்டம், திருமானூரில் குறுவைத் தொகுப்புத் திட்டத்தின் கீழ் வேளாண் பணிகள் நடைபெற்று வருவதை மாவட்ட ஆட்சியர் எ. சரவணவேல்ராஜ் வியாழக்கிழமை ஆய்வு மேற்கொண்டார்.

அரியலூர் வேளாண் விற்பனைக் கூடத்தில் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக்கூட வளாகத்தில் 25 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட குளிர்பதனக் கிடங்கு நபார்டு வங்கி மற்றும் (தஐஈஊ) 2012-13 திட்டத்தின்கீழ் ரூ. 31 லட்சத்து 80 ஆயிரம் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ளதை ஆட்சியர் பார்வையிட்டார்.

பின்னர் சாத்தமங்கலம் கிராமத்தில் மாவட்ட நீர் வடிப்பகுதி மேம்பாட்டு முகமை சார்பாக ஒருங்கிணைந்த நீர்வடிப் பகுதி மேலாண்மை திட்டத்தின் கீழ் ரூ. 90 ஆயிரம் மதிப்பில் கிராம குளம் ஆழப்படுத்தும் பணிகள் நடைபெற்றுள்ளதையும், ரூ. 1 லட்சம் மதிப்பில் வரத்து வாரி தூர்வாரும் பணிகளும் மற்றும் ரூ. 1 லட்சத்தில்

தடுப்பணை கட்டும் பணிகள் முடிவுற்றுள்ளதையும், கமலக்கண்ணன் என்பவரது நிலத்தில் ரூ. 50 ஆயிரம் மதிப்பில் பண்ணைக்குட்டைகள் அமைக்கப்பட்டு மீன்கள் வளர்க்கப்படுவதையும் மாவட்ட ஆட்சியர் நேரில் பார்வையிட்டார். தமிழக முதல்வரின் உத்தரவின்படி நிலத்தடி நீர் ஆதாரமுள்ள குழாய் கிணறு மற்றும் வடிமுனை குழாய் ஆகியவற்றின் மூலம் குறுவை சாகுபடியை ஊக்குவிக்கும் நோக்கத்தோடு குறுவை சாகுபடி தொகுப்புத் திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்படி அரியலூர் மாவட்டத்தில் டெல்டா பகுதிகளான திருமானூர், தா. பழூர், ஜயங்கொண்டம் ஆகிய பகுதிகளில் 2500 ஏக்கர் பரப்பில் குறுவை சாகுபடி செய்திட ரூ. 1 கோடியே 2 லட்சத்து 22 ஆயிரம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

திருமானூரில் இத்திட்டத்தின்படி பாலமுருகன் என்பவரது வயலில் நடவு இயந்திரம் கொண்டு நாற்று நடும் பணிகளை ஆட்சியர் பார்வையிட்டார்.

மேலும் இச்சாகுபடிக்கான நாற்றுகளை விவசாயிகளுக்கும் ஆட்சியர் வழங்கினார்.

மேலும் திருமானூரில் சூரிய சக்தி மூலம் நீரேற்றி மோட்டார் மூலம் கார்த்திகேயன் என்பவரது விவசாய நிலத்தில் கரும்பு, நெல் பயிர்களுக்கு நீர் பாய்ச்சும் பணிகள் நடைபெறுவதை ஆட்சியர் பார்வையிட்டார்.

பின்னர் திருமானூரில் ரூ. 37 லட்சத்து 5000 மதிப்பில் விதை சுத்திகரிப்பு நிலைய கிடங்கு அமைப்பதற்கான பணிகள் நடைபெற்று வருவதையும் ஆட்சியர் பார்வையிட்டார்.

இந்த ஆய்வுகளின்போது வேளாண் துணை இயக்குநர் (பொ) முரளிதரன், நீர்வடிப்பகுதி மேலாண்மை வேளாண் துணை இயக்குநர் செந்தமிழ்செல்வன், வேளாண் உதவி இயக்குநர்கள் பாண்டியன், பாபு, வேளாண் அலுவலர்கள் வடிவேல், சுப்ரமணி, செல்வகுமார், வேளாண் பொறியியல் துறை உதவி செயற்பொறியாளர் நெடுமாறன், உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**<u>தஞ்சையில் நாளை நாட்டுக்கோழிவளர்ப்பு பயிற்சி</u>**

**தஞ்சாவூர்**

"தஞ்சாவூர்-திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் உள்ள வட்டார போக்குவரத்து அலுவலகம் அருகில் இயங்கி வரும் கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் சனிக்கிழமை (ஜூலை 5) நாட்டுக்கோழி வளர்ப்பு மற்றும் முதலுதவி மூலிகை மருத்துவம் பற்றிய பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

மேலும் விவரங்களுக்கு 04362-204009, 98424-55833 என்ற எண்களில் தொடர்பு கொள்ளலாம்" என தமிழ்நாடு கால்நடை மருத்துவப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி

மற்றும் ஆராய்ச்சி மையத்தின் பேராசிரியர் மற்றும் தலைவர் என். புண்ணியமூர்த்தி வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

**"கால்நடை மருந்தகங்களில் உலர் தீவனம் பெறலாம்'**

**தூத்துக்குடி**

தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள கால்நடை மருந்தகங்களில் கால்நடைகளுக்குத் தேவையான உலர் தீவனங்களை பெறலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் ம. ரவிக்குமார் வெளியிட்ட செய்திக் குறிப்பு: கோடைக்காலங்களில் கால்நடைகளுக்கு ஏற்படும் தீவனப் பற்றாக்குறையைப் போக்குவதற்கும், விவசாயிகளுக்கு மானிய விலையில் உலர் தீவனம் கிடைக்கச் செய்திட வேண்டும் என்ற நோக்கிலும் தமிழக முதல்வர் ஆணையின்படி, தூத்துக்குடி மாவட்டத்தில் புதுக்கோட்டை, கருங்குளம், தென்திருப்பேரை, மெஞ்ஞானபுரம், சாத்தான்குளம், ஓட்டப்பிடாரம், கோவில்பட்டி, விளாத்திகுளம் ஆகிய 8 அரசு கால்நடை மருந்தகங்களில் உலர் தீவன விற்பனை மையம் செயல்பட்டு வருகிறது.

இந்த மையங்களில் ஒரு கிலோ வைக்கோல் ரூ. 2-க்கு மானிய விலையில் கால்நடை வளர்ப்போருக்கு வழங்கப்படுகிறது. ஒரு மாட்டுக்கு நாளொன்றுக்கு 3 கிலோ வீதம் ஒரு வாரத்துக்கு 21 கிலோ உலர் தீவனம் மானிய விலையில் வழங்கப்படும்.

கால்நடை வளர்க்கும் ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக 5 மாடுகளுக்கான உலர் தீவனம் வாரந்தோறும் 105 கிலோ வீதம் மானிய விலையில் வழங்கப்படும். இந்தத் திட்டத்தில் பயனடைய விரும்பும் கால்நடை வளர்ப்போர் தங்கள் புகைப்படம் மற்றும் குடும்ப அட்டை நகலுடன் அருகிலுள்ள கால்நடை மருந்தகத்தை அணுகி தீவன அடையாள அட்டை பெற்று பயனடையலாம் என செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**முதல்வர் ரங்கசாமியின் மூன்றாண்டு கால சாதனை ஆட்சி:வேளாண்துறையில் அரசின் கூடுதல் கவனம்**

**புதுச்சேரி**

புதுவை மாநிலத்தின் பொருளாதார முன்னேற்றத்தில் பங்கெடுக்கும் வகையில் பெரும்பாலான பணிகள், சேவை மற்றும் தொழிற்சாலைகளுக்குச் சென்றுவிட்டன. இந்த நிலையில், வேளாண்மைத் துறையில் கவனம் செலுத்தவும், வளர்ச்சியை ஏற்படுத்தவும், பல்வேறு திட்டங்களை 12வது ஐந்தாண்டுத் திட்டத்தில் அரசு முன்வைத்திருக்கிறது.

நிலம் மற்றும் தண்ணீர் பற்றாக்குறை நிலவும் நேரத்தில், குறைந்த நீரையும், நிலத்தையும் கொண்டு அதிக விளைச்சல் பெறுவதற்கான நடவடிக்கைகளையும் வேளாண்துறை தீவிரப்படுத்தியுள்ளது.

வருவாய் கிடைக்கக்கூடிய பயிர்களான காய்கறிகள், மலர்கள் போன்றவற்றை மாற்றுப்பயிர்களாக ஊக்குவிக்க திட்டமிட்டுள்ளது. ஏற்கனவே இருக்கும் மனிதவளத்தைக் கொண்டு, அவைகளின் திறனை மேம்படுத்தவும், உற்பத்தியை ஊக்குவிக்கவும் தேவையான முயற்சியை மேற்கொண்டுள்ளது.

இயற்கை விவசாயம், ஒப்பந்த விவசாயம், கிசான் அட்டைகள் வழங்குவது போன்ற பணிகளை தனியார் உதவியோடு ஊக்குவிக்கவும் அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இயற்கை விவசாய சந்தையை அமைப்பதன் மூலம், இயற்கை விவசாயத்தை ஊக்கப்படுத்தவும், உற்பத்தி பொருள்களை விற்பனை செய்யவும்,

இயற்கை விளைபொருள் விற்பனை மையம் அமைக்கவும் நடவடிக்கை எடுத்துள்ளது.

உற்பத்திக்குப் பிறகான இழப்புகளைக் குறைக்க, சேமிப்புக் கிடங்குகளையும், குளிர்பதன வசதிகளைச் செய்து தரவும், கூடுதல் உழவர் சந்தைகள் அமைக்கவும், விற்பனை மையங்கள் அமைக்கவும் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

**தலைநகரில் 2ஆவது நாளாக மழை!**

**புது தில்லி**

தில்லியில் இரண்டாவது நாளாக வியாழக்கிழமையும் மழை பெய்தது.

வடமாநிலங்களில் தென்மேற்குப் பருவமழை புதன்கிழமை தொடங்கியது. அன்றைய தினம் தில்லி, ஹரியாணா, பஞ்சாப், ராஜஸ்தான், உத்தரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் மழை பெய்தது. இது வியாழக்கிழமையும் தொடர்ந்தது. "வங்காள விரிகுடா, அரபிக் கடலிலிருந்து போதுமான அளவுக்கு காற்று வீசி வருவதால், மழை பெய்கிறது. இதை, வட மாநிலங்களில் பருவமழை வந்ததற்கான அறிகுறியாகக் கருதலாம்' என்று வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்நிலையில், தில்லியில் காலை 8.30 மணியுடன் முடிவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் 4 மி.மீ. மழை பதிவாகியுள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்தது. தில்லியில் காலையிலிருந்து வானம் மேக மூட்டத்துடன் இருந்தது. இதையடுத்து, நண்பகலுக்குப் பிறகு நகரின் பல்வேறு இடங்களில் லேசான மழை பெய்தது.

இதனால், இந்த வாரத்தின் முதல் 3 நாள்களாக புழுக்கத்தில் தவித்து வந்த தில்லிவாசிகள் மழையால் மகிழ்ச்சி அடைந்தனர். வியாழக்கிழமை குறைந்தபட்ச வெப்பநிலை 26.1 டிகிரி செல்சியஸாகவும், அதிகபட்ச வெப்பநிலை 36 டிகிரி செல்சியஸாகவும் பதிவாகி இருந்தது.

முன்னறிவிப்பு: வெள்ளிக்கிழமை வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். சில இடங்களில் இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளது. குறைந்தபட்ச

வெப்பநிலை 26 டிகிரி செல்சியஸாகவும், அதிகபட்ச வெப்பநிலை 36 டிகிரி செல்சியஸாகவும் இருக்கும்.

வரும் வாரம் முழுவதுமே இதே நிலை தொடரும். குறைந்தபட்ச வெப்பநிலை 25-29 டிகிரி செல்சியஸாகவும், அதிகபட்ச வெப்பநிலை 37-39 டிகிரி செல்சியஸாகவும் இருக்கும் என்று வானிலை ஆய்வு மையம் கணித்துள்ளது.

**மத்திய வேளாண்மை அமைச்சகத்தின் சார்பில் டெல்லியில் உழவர் சந்தை தொடங்கப்படுகிறது வெங்காயம், உருளைக்கிழங்கை நேரடி விற்பனை செய்ய நடவடிக்கை**



**புதுடெல்லி,**

மத்திய வேளாண்மை அலுவலகம் அத்தியாவசிய உணவுப் பொருட்கள் மற்றும் காய்கறிகள் ஆகியவற்றை இடைத்தரகர்களின் ஆதிக்கம் ஏதும் இன்றி அவற்றை உழவர்களிடம் இருந்து வாடிக்கையாளர்களுக்கு நேரடியாக செல்லும் வகையில் நாடுமுழுவதும் உழவர் சந்தைகளை (கிசான் மண்டி) ஏற்படுத்தப் போவதாக அறிவித்துள்ளது.

முதல் கட்டமாக டெல்லியில் இந்த உழவர் சந்தைகள் செயல்படுத்தப்படும், மத்திய

வேளாண்மை அமைச்சகத்தின் கீழ் இயங்கும் சிறு விவசாயிகள் வர்த்தக அமைப்பு இதற்கான ஏற்பாடுகளை தொடங்கும் என்றும் வரும் செப்டம்பர் மாதத்தில் இருந்து இந்த உழவர் சந்தைகள் தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அதன் மேலாண்மை இயக்குனர் பிரவேஷ் சர்மா கூறினார்.

தொடக்க நிலையில் இந்த உழவர் சந்தைகள் உருளைக்கிழங்கு, வெங்காயம் மற்றும் தக்காளி போன்ற அத்தியாவசியமான காய்கறிகளை விற்பனை செய்யும். டெல்லி நகரில் மேற்கொள்ளப்படும் இந்த பரிசோதனை வெற்றியடைந்தால் இந்த உழவர் சந்தைகள் நாடுமுழுவதும் விரிவுபடுத்தப்படும் என்று பிரவேஷ் சர்மா தெரிவித்தார்.